**<u>அசல் வழக்கு எண். 14//2021</u>**

02.12.2025

**பெயர் – குருசாமி** (PW –1)

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

23.10.2025ம் தேதி பாரா 1 பதிவு செய்யப்பட்டது. இன்று பாரா 2 முதல் பதிவு செய்யப்படுகிறது

(2) 09.09.2002 ம் தேதியிட்ட பாக ஆவணம் நான் எனது அண்ணன் பெரியசாமி கவுண்டர், எனது அக்கா கருப்பாத்தாள் ஆகியோருக்கு இடையே ஏற்பட்டது. அசல் பாக ஆவணம் என்னிடம் உள்ளது. அசல் ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை சான்றிட்ட நகல் கொடுத்துள்ளேன். க.ச.எண்.593 யை ஒட்டி கிழக்கே க.ச.எண்.594, 592 காலைகள் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதி 593 காலை வழியாக பாதை கேட்டார். 593 காலை பூமியை பற்றி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கிழமேல் செல்லும் தார் ரோட்டை ஒட்டி வடபுறம் எனது பூமி உள்ளது. எனது பூமிக்கு வடபுறமாக 1ம் பிரதிவாதி நாச்சிமுத்துவின் பூமி உள்ளது. அதை ஒட்டி வடபுறம் 2ம் பிரதிவாதி கனகராஜின் பூமியும், அதற்கு அடுத்து வடபுறம் 3ம் பிரதிவாதி கௌதம்ராஜ் பூமியும் உள்ளது என்றால் சரிதான். எனது பூமியின் மேற்கு புறம் எனது அண்ணன் பெரியசாமியின் பூமி உள்ளது.

(3) எனது பூமியின் மேற்கு புறம் 12 அடி அகலத்தில் பாதை உள்ளது என்றால் சரியல்ல. அவர்களாகவே பாதை உள்ளதாக எழுதிக்கொண்டார்கள். அந்த பாதையை பயன்படுத்தக்கூடாது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு இந்த 12 அடி அகல பாதையை தவிர வேறு பாதை இல்லை என்றால் சரியல்ல அவர்களுக்கு வேறு பாதை உள்ளது. அந்த பாதை வழியாக 2ம் பிரதிவாதி கனகராஜ் வாகனம் எடுத்துச் செல்லும் போது நானும், எனது மகனும் பிரச்சனை செய்ததாக குடிமங்கலம் காவல் நிலையத்தில் குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது பூமிக்கு மேற்குபுறமாக உள்ள வண்டித்தடம் தான் பிரதிவாதிகளுக்கான தேவை வழி துய்ப்புரிமை தடம் என்றால் சரியல்ல நாங்கள் தென்னங்காய்களை எடுப்பதற்காகவும், மாட்டு கொட்டகைக்கு செல்வதற்காக தடம் விட்டுள்ளோம். எனது பூமி ரோட்டின் மீது

உள்ளது என்றும் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு எனது பூமிக்குள்ளேயே சென்று வரலாம் என்றும் பிரதிவாதிகள் செல்வதற்காக தான் அந்த தடம் விடப்பட்டது என்றால் சரியல்ல.

(4) 1ம் பிரதிவாதியின் தகப்பனார் தேவன கவுண்டர், 2ம் பிரதிவாதியின் முன் பாத்தியஸ்தர் பெரியசாமி ஆகியோர் 31.08.1974 ம் தேதி பெற்ற கிரைய ஆவணத்தில் மேற்படி தடம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த தடத்தை தான் பிரதிவாதிகளின் முன் பாத்தியஸ்தர்கள் பயன்படுத்தி வந்தார்கள் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எனது பூமியை விலைக்கு கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பூமிக்கு மேற்குபுறமாக உள்ள வண்டித்தடம் தான் பிரதிவாதிகளுக்கான தேவை வழி துய்ப்புரிமை தடம் என்றும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.12.02 15:07:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்